தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி ஞு தை மீ 1 உ (14-1-'23.) | ப. 36.

விஷய அடக்கம்.

1. உலக நடை ... 383
(உதவி பத்திராதிபர்)
2. கயை காங்கிரஸ் ... 384
(R. பஞ்சாபகேசன்)
3. மகாயுத்த நஷ்ட ஈடு ... 384
(அர்த்த சாஸ்திர நிபுணர்)
4. செம்மறிச் செரு ... 385
(ராமசந்திரர்)
5. மெய்ப்பொருள் நாயனார் ... 386
(துகளன் எழுதியது)
6. ரயத்துவாரி நிலத்தீர்வை முறை ... 386
(C. S. பம்பாபதி சாஸ்திரி, B.A., B.L.)
7. கட்டடக் குறிப்புகள் ... 387
(B. ராமஸ்வாமி)
8. கெடுப்ப தொழி ... 388
(தரும சீலன்)
9. புயற் காற்று ... 389
(V. நாராயணையர் M. A., M. L.,)

தமிழ் உலகு
(THE TAMIL WORLD)

ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்

தமிழ் வாரப் பத்திரிகை

பத்திராதிபர், S. பட்டாபிராமன், M. A.

சந்தா விவரம் :—

உள் நாடு.	வெளி நாடு.
½-வருஷம் ரூ. 3 0 0	½-வருஷம் ரூ. 3 8 0
1-வருஷம் ரூ. 5 0 0	1-வருஷம் ரூ. 6 0 0

எளிய நடையில் எழுதப்பட்டது ; பாமரர்களுக்கும் பண்டிதர்களுக்கும் ஒருங்கே உதவுமாறு பலவிதமான பொருள்கள் அடங்கியது ; பிரதிவாரம் லௌகிக விஷயங்களைப்பற்றிய குறிப்புகளும் வியாசங்களும் சரித்திர சம்பந்தமான விஷயங்களும் சாஸ்திர ஆராய்ச்சிக் குறிப்புகளும் சிறு கதைகளும் வேறு பலவிதமான பொருள்களும் அடங்கியது. மகாகவி ரவீந்திரநாத் டாகூர் தமது நூல்களைத் தமிழில் இப்பத்திரிகையில் வெளியிட அனுமதி கொடுத்திருக்கிறார். 'சித்திரா' வென்னும் அவருடைய நூலானது ஏற்கனவே இப் பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கிறது. அவருடைய மற்றொரு நூல் "புயற் காற்று" இப்பொழுது தொடர்ச்சியாக இப்பத்திரிகையில் மொழிபெயர்க்கப் பட்டு வருகிறது.

ஆகவே தமிழைப் பாராட்டவேண்டும், தமிழர் முற்போக்கு அடைதல் வேண்டும் என்பவர் யாவரும் வாங்கி வாசிக்கத்தக்கது.

'தமிழ் உலகு' கார்யாலயம்
16, பசுபதி அக்கிரஹாரம்,
மைலாப்பூர், சென்னை.

சுதேசியமானது!

உபயோகமுள்ளது!!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

சென்னை ஜார்ஜ் டவுன் ஸ்டிரிங்கர்ஸ் தெருவு, டையமெண்டு அச்சுக்கூடத்தில்
ஆர். வெங்கிடாசலம் செட்டியாரால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16,
'தமிழ் உலகு' கார்யாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.

உம்மிடி
ராமய்ய செட்டி குருசாமி செட்டி கம்பெனி

நம்பிக்கையான நகை வர்த்தகர்கள்
25, சைனாபஜார் ரோட், மதராஸ்.

ఉమ్మిడి రామయ్య శెట్టి, గురుసామి శెట్టి,
కంపెని
నగలవర్తకులు
25, చైనా బజారు రోడ్డు, మదరాస్

இனும்! இனும்!!
"கிலாபத்" இனும்!!!

இஸ்லாம் மார்க்க உண்மைகளையும் ராஜீய தேசிய விஷயங்களையும் தன்னுட்கொண்டு, ராயல் 8-பக்கங்கொண்ட பெரிய ஸைஸில் ஒவ்வொரு சஞ்சிகையையும் 48-பக்கங்களுடன் நல்ல உயர்தர கிளேஸ் காகிதத்தில் மிக நேர்த்தியாகச் செந்தமிழில் அச்சிடப்பட்டு ஒவ்வொரு மாதம் முதல் தேதியிலும் வெளியாகும் "தாருல் இஸ்லாம்" என்னும் மாதப் பத்திரிகைக்கு 1923-ல் சந்தாதாரராகச் சேரும் ஒவ்வொரு புதிய நண்பருக்கும் ஒவ்வொரு "கிலாபத்" புத்தகம் இனுமாகக் கொடுக்கப்படும். கொஞ்சம் பிரதிகளே யிருக்கின்றன. முந்துங்கள்! முந்துங்கள்!!

"தாருல் இஸ்லாம்" ஆபீஸ்,
நாச்சியார் கோவில்.

துப்பறியும் நாவல்கள்

ஆரணி குப்புசாமி முதலியார் எழுதியது

	ரூ.	அ.
இந்திரா பாய் ..	2	8
அல்லது இந்திரஜாலக் கள்வன்		
சுந்தர சிங் ...	1	8
அல்லது பாஸ்கரவிலாஸ் படுகொலை		
அம்புஜாக்ஷி ...	2	0

வி. நாராயணன் கம்பெனி,
4, தொண்டிசெட்டி தெரு, மதராஸ்.

ஆரிய சரித்திரம்

நீதிக்கதைகள்.

சுமார் 300 பக்கங்கள் உள்ளது. சித்திரப் படங்களும் அமையப்பெற்றது, நான்காம் பதிப்பு. தெள்ளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு, உயர்ந்த கடிதத்தில் பெரிய எழுத்துக்களால் அச்சடிக்கப்பட்டு அழகாய் பயிண்டு செய்யப்பட்டுள்ளது. விலை ரூ. 1—0—0.

ஸ்ரீ கிருஷ்ணன் தூது.

இது வில்லிபுத்தூரார் பாரதத்தைத் தழுவி, பாரத கதையை ஆதியோடந்தமாகச் சுருக்கமாகவும், கிருஷ்ணன் தூதுச் சருக்கத்தை விரிவாகவும், அவ்வவ்விடங்களில் சமயோசிதத்துக் கேற்ப வில்லிபுத்தூரார் அரிய பாக்களின் மேற்கோளுடனும், பள்ளியிற்பயிலும் சிறுவர் சிறுமியர்களுக்கும் ஏனையோருக்கும் மகாபாரதக்கதை இனிது விளங்குமாறு இனிய தெள்ளிய நடையில், வித்வான் ஆறுமுக சேர்வையவர்களால் எழுதப்பட்டது. படிக்கப் படிக்க சுவையை உண்டு பண்ணும். சகல நீதிகளும் அமையப்பெற்றது.

விலை ரூபா 1—0—0.

கணேஷ் கம்பெனி,
39, தம்பு செட்டி தெரு, சென்னை.

"பணம்"

திருச்சிறுப்பள்ளியினின்றும் 1-9-22
முதல் வெள்ளிக்கிழமை தோறும்
வெளிவந்துலாவும்
தெள்ளிய தமிழ் வார வர்த்தமானி.
விவேகம், விநோதம், அநுபவம் முதலியன விளக்குவது.

வாரந்தோறும் வெளியாவது. தேச நன்மையையே நாடி எழுதப்படுவது. அறிவை விளக்கி உற்சாகத்தைக் கொடுப்பது. தமிழ் தெரிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புகுந்து நிலவும் கீர்த்தி சிறந்தது. எவர் கையிலும் இப்பத்திரிகையை இனி காணலாம். படிக்கப்படிக்க விஷயமறிவதன்றி பேரானந்தமும் பெருகும்.

வருடச்சந்தா ரூ. 5—0—0.
அறுமாதச்சந்தா ரூ. 2—12—0.
மானேஜர், "பணம்" ஆபீஸ், திருச்சி.

உலக நடை

[உதவி பத்திராதிபர்]

கெனியா இந்தியர்கள் தங்கள் குறைகளை நிவர்த்திக்கக் கருதி வரி மறுப்பைக் கைக்கொள்ளத் தீர்மானித்திருக்கிறார்கள். இவ்வளவு நாட்களாக பலவிதத்திலும் முறையிட்டார்கள். அதிகாரிகள் இணங்கவில்லை. வெள்ளையர் மஹிமையே நாளுக்கு நாள் அதிகரித்தது. நியாயத்துக்கு மாறுபாடாக நடக்கும் எவ்வாட்சியையுந் திருத்த எவ்வுபாயங்களையுந் தேடலாமே. சமாதானமாய் முறையிட்டதைக் கேட்டாரில்லை. கடைசி முறையாகிற வரி மறுப்பு உபாயமானது நியாயத்தை நிலை நிறுத்த வல்லது. ஆயினும் கெனியாவில் வெள்ளையரின் ஆதீனம் அதிகம். பலவிதத்திலும் வரி மறுப்பால் அரசாங்கம் துன்பமடையாதவாறு காக்க முயலுவார்.

* * *

லோஸானில் கூடிய வல்லரசுகளின் பிரதிநிதிகள் ஸமாதான விஷயமாய் ஓர் முடிவுக்கும் வரக்கூடவில்லை. பல சில்லரைக் கம்மிட்டிகள் தங்கள் வேலைகளை நிறுத்திவிட்டன. ஆயினும் சமாதான நிபந்தனைகள் எல்லாம் வல்லரசுகளால் வரையப்பட்டு துருக்கியருக்கு கூடிய சீக்கிரத்தில் அனுப்பப்படும். துருக்கியரும் தங்களுடைய நிபந்தனைகளையும் எழுத்தில் வரைந்து தெரிவிக்கப் போகிறார்கள். இதனிடையே இருகட்சியாரும் சைந்நியங்களைத் திரட்டிக்கொண்டு வருகிறார்கள். ஆங்கில கப்பற்படை துருக்கியைச் சார்ந்த கடலில் வந்து சேர்ந்திருக்கிறது. என்று யுத்தம் மறுபடி துவங்குமோ வென்ற ஸ்திதியில் தானிருக்கிறது. துருக்கியர் பல நிபந்தனைகளைத் திருத்தி இணங்கியு மிருக்கிறார்கள்.

* * *

ஜர்மனியில் ப்ரஞ்சு ஸைந்நியம் புகுந்து விட்டது. சில தொழிற்சாலைகளையும் கைப்பற்றி விட்டது. தொழிற்சாலைகளில் தங்கள் அதிகாரிகளை அமர்த்தி' அவர்களுடைய வேலைகள் நடந்தேறுவதற்காகவும், அதிகாரிகளைக் காப்பாற்றவும் ஸைந்நியம் புகுந்திருப்பதாகக் கூறுகிறார்கள். ஜர்மனியில் எல்லா பிரதேசங்களிலும் ப்ரஞ்சுக்காரர் எடுத்துக் கொண்ட முறையைப்பற்றி கண்டனங்கள் செய்யப்பட்டுள்ளன. இதனிடையே ப்ரஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியாரில் சிலர் தங்கள் பிரசாரவேலையைத் துவங்க முற்பட்டிருக்கிறார்கள். வேலையாளர் வேலைசெய்ய மறுப்பார்களோ வெனவும் தோன்றுகிறது. ஆனால் ஜர்மனியில் பொருள்நிலை கெட்டிருப்பதால் வேலையில்லாது போனால் வேலையாளர் உணவுக்கே தவிப்பார்கள். இந்நிலைமையில் அடுத்த நிமிஷமே எவ்விதம் மாறுமோ வென்று சொல்லக்கூட வில்லை.

அமெரிக்காவிலிருந்து மகாயுத்த ஸமாதான நிபந்தனைகளைக் காப்பாற்ற ஜர்மனியில் வைக்கப்பட்ட துருப்புகள் திரும்பிவரும்படி கட்டளையிடப் பட்டனர். ஆங்கிலேயர்களுடைய ஸைந்நியங்களெல்லாம் வேண்டும்போது துருக்கியைத் தாக்குவதற் கென்று தயாரிக்கப்படுகிறது. ஆகவே, ஜர்மனியில் ஏதாவது கலகமேற்பட்டால் ப்ரஞ்சுக்காரர் தனியே போராட வேண்டிவரும். ஜர்மானியரோ ஸைந்நிய தளவாடங்கள் யாதுமில்லாமல் பரிதாப நிலையில் இருப்பதாக சொல்லப்படுகிறது. ஆயினும் ருஷியாவில் இவர்கள் செல்வாக்கால் யுத்தத்திற் கென்று வேண்டியவைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. உணவுக்கே ஐரோப்பா தேசங்களனைத்தும் போர்புரிகின்றன. இந்நிலையில் சேனைத்தலைவர்கள் இட்டது சட்டமாக விளங்குகிறது. ப்ரஞ்சு சேனாபதியாகிய மார்ஷல் போஷ் பலத்திலேயே பெருமை பூண்டவர். பலத்தாலேயே அரசாங்கக் காரியங்கள் நடைபெற வேண்டுமென அபிப்பிராயம் பூண்டவர். இவர் செல்வாக்கே அங்கு ஓங்குகிறது.

* * *

நமது அரசாங்கத்தார் இரண்டு வருஷம் முன்னதாக ரூபாய் மாற்றத்தை இரண்டு ஷில்லிங்காக விதித்து, அவ்விதம் நடத்திவர இயலாததைக் கண்டு மௌனமாயிருந்தனர். இப்போது கௌன்ஸில் பில் என்று சொல்லப்படும் இந்தியா மந்திரியின் ஆர்டர்களை விற்கத் துவங்கப்போவதாய் வெளியிட்டிருக்கிறார்கள். இவ்வார்டர்களை அவசியமான இந்தியா ஆபீஸ் செலவுக்கு மட்டும் விற்று வந்தால் போதுமானது. அப்படியில்லாமல் ஆங்கிலேயர்களைத் திருப்தி செய்வதற்கென்று தலையிட்டுக் கொண்டு வரம்பில்லாமலும் மனம் போனவாறும் விற்று வந்தால் வருங் கேடுகளை வருணிக்க முடியாது.

* * *

இந்தியா பாங்கு வட்டி விகிதம் இப்போது நூற்றுக்கு ஏறக்குறைய எட்டு ஆகயிருக்கிறது. இங்கிலாந்திலோ மூன்று விகிதத்திலேயே முதல் கிடைக்கிறது. இவ்வேற்றுமையையும் இந்தியாவில் காலத்துக்குக் காலம் வட்டி விகிதத்தில் ஏற்றத் தாழ்வு அதிகமாயிருப்பதையும் கவனித்து, ஓர் நிபுணர் அரசாங்கத்தை காகித நாணயத்தை வட்டியுயர்ந்த நிலையில் அதிகமாய் வெளியிட்டு வரும்படி தூண்டுகிறார். காகித நாணயங்களை அதிகமாய் வெளியிட்டால் வட்டி விகிதம் நிச்சயம் குறைந்துவிடுமென்று இந்த நிபுணர் அபிப்பிராயப்படுகின்றாரெனத் தோன்றுகிறது. இவ்வெண்ணமே தவறான எண்ணம். மற்றும் காகித நாணயங்களை அதிகமாய் வெளியிடும் முறைகளையும் இவர் விரித்துக் கூறுவாராயின், இம்முறைகளின் பயனின்மை புலப்படும்.

கயை காங்கிரஸ்

[R. பஞ்சாபகேசன்]

காங்கிரஸ் கூடி அரிய பெரிய காரியங்களைச் செய்துவிடப்போகிறது என்று எண்ணிய எண்ணங்களெல்லாம் பாழடைந்து விட்டன. செய்ய வேண்டிய முக்கியமான காரியங்களெல்லாம் ஒரு புறமிருக்க, அவற்றை யாதும் கைக்கொள்ளாமல் வீணில் பேச்சுக் கூட்டமாக முடிந்தது. சட்ட சபைகளில் தான் பிரஸங்கிகள் தங்கள் பிரஸங்கங்களின் மகிமையைப் பெரிதாகப் பாராட்டி உழைக்கிறார்கள். உண்மைத் தேச ஸேவையை நாடிய காங்கிரஸிலும் இவ்வாறுயபதேவென வருந்த வேண்டியிருக்கிறது. கட்சிப் பிளவேற்பட்டாலும் ஒற்றுமைக்கு பங்கம் யாதும் இல்லையென ஸ்ரீமான் தாஸர் கூறுகிறார். ஓர் நன்மையைக் குறித்துப் பாடுபடுபவர்களிடம் கட்சிப் பிரதிகட்சிகள் தோன்றுவது நலமென தாஸர் அவர்கள் கூறியதைப் பாராட்டுகிறோம். அவர் காங்கிரஸினுள்ளேயே இரண்டாவது கட்சியைத் தோற்றுவிக்கப் பாடுபடுவதிலும் எமக்கு ஆக்ஷேபணையில்லை. ஆயினும் இரண்டாவது கட்சியாகிய சிறுபான்மையோர் கட்சியை பெரும்பான்மையோர் கட்சியாக மாற்ற முயலும் அவரது முயற்சிகளை வேறு துறைகளில் உபயோகித்தால் தேச நன்மைக்கு பொருந்தியதாயிருக்குமே. கட்சிகள் பல இருந்தாலும் அல்லது ஒற்றுமை இராது போனாலும், நம் நன்மைகள் நடந்தேறிற்றானால் ஓர் குறையுமில்லை. தேச நன்மைக்காக ஒற்றுமை வேண்டுகிறோமே யல்லாது, ஒற்றுமை மட்டும் நமது லட்சியமல்ல.

தாஸர் கட்சி ஒரு புறமிருக்க, ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் கட்சியாகிய பெரும் பான்மையோரது கட்சியார் காங்கிரஸில் செய்த வேலைகளைச் சற்று கவனிப்போம். சட்ட ஸபை புகுவது கூடாதெனப் பலர் போற்றச்செய்த பிரசங்கத்தின் மகிமை ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியாரைச் சார்ந்ததேயாம். பின்னர் பெரிய காரியமாகப் புகழப்படும் அரசாங்கக் கடன் விஷயமான தீர்மானம் நம் தேச பக்தருடைய பெருமைக்குரியது. இத்தீர்மானத்தின் பயன் என்ன? அரசாங்கம் வாங்கும் கடன் இனி நின்றுவிடுமா? அல்லது நம் ஜனங்கள் தான் கடன் கொடுப்பதினின்றும் விலகுவார்களா? பயனற்ற தீர்மானத்தை பெருத்த கரகோஷத்தினிடையே போற்றியதைத் தவிர வேறு யாதும் காணவில்லை. இடையே ஆக வேண்டிய பல காரியங்கள் எடுபட்டு நடக்காமலிருக்கையில் முடிவில் தீர்மானிக்கவேண்டிய தீர்மானம் நிறைவேறிவிட்டது. இவ்வித தீர்மானங்களெல்லாம் பிறர் நகைப்புக்கே இடந் தருகிறது. ஆயினும் இவைகளெல்லாம் சுயராஜ்ஜியத்துக்குப் பாடுபடும் நமது தலைவர்களின் ஆவேசத்தையே விளக்குகின்றன. ஆவேசத்தால் உயர்ந்த இடத்தை ஒரே அடியில் எட்ட முயலுகின்றனரே யல்லாது பல படிகளைக் கடந்து சுகமாகச் செல்லப்போதுமான பொறுமையால் ஆவேசத்தை யடக்குவதில்லை.

நம் அரசாங்கமோ பல குறைகளிருந்தாலும் பல கெடுதல்களைச் செய்தாலும் அரசாங்கத்திற்குரிய பல கடமைகளையுஞ் செய்து வருகின்றது. இந்த கடமையாகிற நன்மைகளை உத்தேசித்தே பொது ஜனங்கள் கெடுதல்களையும் சகித்துக்கொண்டு நம் அரசாங்கத்தைப் போற்றுகிறார்கள். கெடுதல்களும் குறைகளுமற்ற சுயராஜ்ஜிய அரசாங்கத்திற்காகப் பாடுபடும் நமது ஒத்துழையாதார் அவர்களுடைய பார்லிமெண்டாகிற காங்கிரஸைக் கொண்டு அரசாங்கக் கடமைகளைச் செய்யும் ஓர் ஸ்தாபனத்தை அமைத்துப் பின்னர் ஜனங்களிடம் அந்த ஸ்தாபனத்தின் மஹிமையையும் குணத்தையும் எடுத்துக் கூறினால், காங்கிரஸ் அரசாங்கத்தின் பிரஜைகளாக சந்தோஷத்துடன் மாறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

ஆகவே, நம் தலைவர்கள் நிர்மாண வேலைகளை விரித்து எல்லாவற்றையும் செய்யத் தொடங்குவார்களாயின் தேச ஸேவையைச் செய்தவராவார். தற்காலத்திலிருக்கும் அரசாங்கமே அனாவசியம். காங்கிரஸே அரசாங்க வேலைகள் முழுமையும் செய்து வருகின்றது என்ற காலம் என்று வருமோ அன்றைக்கு சுயராஜ்ஜிய மடைவோம். இந் நிர்மாண முறைகளுக்குத் தேவையான செலவு காங்கிரஸ் பெயரால் கடன் வாங்கியே வேலைகளைத் துவங்கலாம். பின்னர் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு பிரஜைகள் இப்போதிருக்கும் வரிகளைப் போல் இரண்டு பங்கு வரிகளையுங் கொடுத்து வரத் தயங்கார்கள். குறைகளும் கெடுதல்களுமில்லாத அரசாங்கத்திற்கு அதிக வரி கொடுக்கத் தகுந்ததே. இப்போது நிர்மாண வேலைகளுக்குப் படும் கடனை காங்கிரஸ் அரசாங்கக் கடனாக பாவித்துக் கடமைகளை நடத்தக் கூடியதே.

மகாயுத்த நஷ்ட ஈடு

[அர்த்த சாஸ்திர நிபுணர்]

ஐரோப்பிய மகாயுத்தத்தில் ஜர்மனி தோல்வி யடைந்தபின், சமாதான நிபந்தனைகளில் மற்ற தேசங்களுக்கு யுத்தத்தாலுண்டாய நஷ்டங்களுக்கு ஜர்மனி ஈடுசெய்யும்படி விதிக்கப்பட்டது. முக்கியமாய் ப்ரான்ஸும் பெல்ஜியமுமே நஷ்ட ஈட்டுத் தொகையில் பெரும் பாகம் அடைய வேண்டியிருக்கிறது. தொகை பெரிதாயிருப்பதால் பல தவணைகளில் ஜர்மனி செலுத்தும்படி விதித்திருக்கிறார்கள். ஆயினும் இப் பெரும் திரவியத்தை எவ்விதம் ஈடு செய்வது. தேசத்தில் விளையும் பொருட்களைத்தான் வருஷா வருஷம் சிறிது சிறிதாக அனுப்பக் கூடும். ஜர்மனி தற்சமயத்தில் வெகு கேவலமான நிலைமையிலிருக்கிறது. பொருள் நிலையைத் திருத்தி முற்போக்குக்காய வழிகளைச் செய்வதற்கு வெகு காலம் கஷ்டப்படவேண்டும். இந்நிலைமையில் அந்நிய நாடுகளிலிருந்து இடையூறுகள் உண்டானால் வேறு வழியில்லை. தலை கிளப்பவே முடியாது. இந்த விஷயத்தை நன்றாய் கவனித்தறிந்து சென்ற வாரத்தில் பாரிஸில் ஆலோசிக்கக் கூடிய நேச தேச மந்திரிக்கூட்டத்தில் ஆங்கிலப் பிரதிநிதி, ஜர்மனி பொருள் நிலையை திருத்திக் கொள்ள நான்கு வருஷம் இடை கொடுக்க வேண்டுமென்றும், பிறகு பல வருஷங்களில் நஷ்ட ஈட்டைப் பெறவேண்டுமென்றும் உரைத்தார். ப்ரான்ஸோ யாதொரு ஜாமீனையும் பெறாமல் இதற்கு இணங்க முடியாதென்று சொல்லிவிட்டது. கடைசியாக ஓர் முடிவும் தீர்மானிக்கப்படாமல் ப்ரஞ்சுக்காரர்கள் சைந்நியத்தைத் தயார் செய்து ஜர்மனியில் நிலக்கரி விளையும் பிரதேசத்தைக் கைவசத்தில்

வைத்துக் கொண்டு தொழிலை தாங்களே தங்கள் மேற்பார்வையில் நடத்தி நஷ்ட ஈட்டைப் பற்றிக்கொள்ள முற்பட்டிருக்கிறார்கள். ஜர்மானியர் இம்முறை பயனற்ற தெனவும், இம்முறையால் தாங்களும் நாசமாகி பிராஞ்சுக் காரர்களும் வீணில் வருந்த வேண்டு மெனவும் சொல்லியும் ப்ரான்ஸ் பிடிவாதத்துடன் ஸைந்நியத்தை வெளிக்கிளப்பி யிருக்கிறது.

ஜர்மனி முற்போக்கு அடைந்தால் தங்களை மறுபடி தாக்கக்கூடுமென ப்ரஞ்சுக்காரர் பன்முறை கூறியுள்ளார். இந்த பீதியை முன்னிட்டே நேச தேசத்தார் நீடித்த நேசத்துடன் இருக்க வேண்டுமென ப்ரான்ஸ் வற்புறுத்தி யிருக்கிறது. ஆயினும் இப்போது இந்நஷ்ட ஈடு விஷயமான முறையில் நேச தேசத்தாருக்குள் பிளவு உண்டாயிருக்கிறது. பீதியாலும் பொறுமையாலும் பிரஞ்சுக்காரர் கைக்கொண்ட முறையை பிறர் ஸகாயமில்லாமல் தாங்களாகவே பின்பற்றக்கூடுமா என்ற விஷயமும் ஸந்தேகமாயிருக்கிறது.

ஜர்மானியரோ பொறுமையிலும் வீரத்திலும் பெயர் பெற்றவர்கள். அவர்களை ஆளுவது முடியாத காரியம். ப்ரஞ்சுக்காரர் தங்கள் மேற்பார்வையில் நடத்தப்போகும் தொழிலிலிருந்து கிடைக்கும் ஊதியம் தங்கள் ஸைந்நிய ரக்ஷணத்துடன் கூடிய மேற்பார்வையின் செலவுக்குக்கூட ஈடேறாது. அதிக்கிரமச் செயல்கள் யாதாயினும் செய்தால் ஜர்மானியர் முன் தனியே நிற்பது அரிது. ஆகையால் ஜர்மானியரை நம்பி, அவர்கள் தங்கள் சிரமத்தாலேயே முன்னடையஇடைகொடுத்து, பின் நஷ்ட ஈட்டைக் கைப்பற்றுவதே தகுதியென அனுபவத்தாலாவது சீக்கிரத்தில் பிரஞ்சுக்காரர் தெரிந்து கொள்ளக்கூடும். உலகத்தில் மனிதனும், ராஜ்யமும் பிறருடைய மதிப்பை பெற்றால் தான் சுகமாக வாழலாம். எவரும் பல காரியங்களில் பிறர் உதவியையே நாடவேண்டும். இந்த விஷயத்தை ஜர்மானியரும் அறிந்திருக்கிறார்கள். வாக்குறுதிகளைக் காப்பாற்றினால் தான்முன்னேறலாம் என்ற விஷயம் ஜர்மனியரும் அறியாதாரில்லை.

செம்மறிச் செரு.

[ராமசந்திரர்.]

கருங்கடலின் கரையதனிற் கறுவுடைய தகரிரண்டு
செருவியற்றச் சேர்ந்தருகே செழுங்குருதி நசையாலே
பெரு நரிகள் மூன்றுமொரு பால்வந்து பார்த்தெதிரே
வருங்கரடி தனைவிலக்க முயல்வதையும் காண்பாயே'

அண்ட புராணம்.

நான் ஒருநாள் காலையில் கடற்கரையிலுள்ள தாரகாவனத்தை யடைந்து அதன் வழியே செல்லும் வாய்க்காலை யடைந்த பொழுது, அதின் இருகரைகளிலும் இரண்டு செம்மறிக் கடாக்கள் நெற்றியில் குருதி பெருக நின்றன. மேல்கரையில் நின்ற கடாவின் கொம்பு ஒன்று முறிந்து தொங்கிற்று. அதனருகில் ஒரு வெள்ளை நரி நாக்கை நீட்டி நின்றது. பின்புறத்தில் இரண்டு தடி நரிகளும் ஆவலுடன் நோக்கி நின்றன. அப்பொழுது அக்கடாவும் வெள்ளை நரியைப்பார்த்து, 'அப்பா, சுவேதவர்மா, உன் பேச்சைக் கேட்டு வீராவேசங் கொண்டு அக்கரை யடைந்து தாருகனால் கொம்பிழந்து வந்தேன். எனக்குப் பக்க பலனாக வருவதாகச் சொல்லி என்னை தூண்டிவிட்டுப் பிறகு இங்கு தங்கிவிட்டதும் நியாயமாகுமா? உன்னைப்போலவே காலவனும் உரோமசனும் ஒதுங்கி நின்றார்களே. இதுவும் நியாயமாகுமா? நெடுங்காலம் என்னுடன் ஒற்றுமையா யிருந்து எனக்குப் பகைவந்த காலத்தில் காட்டிக் கொடுத்தது மழகா? இனி நான்செய்யும் வகையறியேன். தாருகனும் இக்கரை யடைந்து இங்குள்ள பொழில்களை யெல்லா மழித்து விடுவான். நீங்கள் காப்பாற்றிக் கொள்ள முடிந்தால் காப்பாற்றிக் கொள்ளலாம்' என்று கூற,

சுவேதவர்மன்: 'அப்பா, கிரிஜா, நீ வருந்துவதை நோக்கி என் கண்களிலும் வாயிலும் நீர் பெருகுகின்றது. உன்னை மோசம் செய்ததாக நினைத்தது சரியல்ல; நானும் எனக்குப் பக்க பலனாக இருந்த காலவன் முதலியோர்களுடன் ஆலோசித்த பொழுது, அங்கு தாருகனுக்கு உதவிபுரிய ரிசிகனென்னும் பெருங் கரடி வருவதாகத் தெரியவந்தது. அப்பொழுது நாங்களும் அங்கு வந்தால் பெருங்கலக மேற்படுமே யென்று பயமடைந்தோம். அஃதன்றியும் ரிசிகனுக்கும் இக்கடற்கரைக்கு வருவதற்கு ஒரு காரணமுண்டாகி விடுமென்பதை யெண்ணியே நாங்கள் உன்னோடு வராதிருந்தோம். இப்பொழுது தாருகன் இக்கரை யடையாமல் தடுக்க வெண்ணியே நானும் என்னினத்தவர்களும் வந்திருக்கிறோம். ஆகையால் நீ கொம்பிழந்தேன் என்று மனம்வருந்தாது இங்கு சற்று நிற்பாயாகில் நாங்கள் தக்க ஏற்பாடு செய்வோம்' இவ்வாறு சுவேதவர்மன் சொல்லியவுடன் அருகில் வந்த காலவன் என்னும் நரி சொல்லியதாவது:

காலவன்: 'எனதினிய நண்பர் சுவேதர் சொல்லியதே சரி. ஆனாலும் தாருகன் இக்கரை யடைந்தாலும் ரிசிகன் இவ்விடம் வராமலே தடுப்பது அவசியமென எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில், தாருகன் தனியே வந்தால் நாமனைவரும் சேர்ந்திருப்பதைக் கண்டு பயந்து தயங்கி நமது சொல்லுக் கிணங்கி நடப்பான். அஃதல்லாது கரடிக் கிறைவனது துணைபெற்றால் நம்மை மதியான். அதனால் தான் தாருகனைத் தனித்தழைத்துப் பேசவேண்டுமென நினைக்கிறேன். ஆனால் இவ்வாறு ஆலோசிப்பதில் பயனில்லை போலிருக்கிறது. அதோ கொஞ்ச தூரத்தில் ரிசிகன் காணப்படுகிறான். அவன் அதிக விரைவாய் வருவதைக் கண்டால் நாம் பேசி முடிப்பதற்கு முன்னமேயே வந்து விடுவான்போல் இருக்கிறது. தாருகனும் அவனையே அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கொண்டிருக்கிறான். நமக்குள் எம்மாதிரியான மனஸ்தாபங்கள் இருந்த போதிலும் அவைகளை யெல்லாம் அடக்கிக் கொண்டு அக்கரடியை வராமல் தடுக்க முயல வேண்டும். என்று சொல்லி நிறுத்தியவுடன்

கரடிக் கிறைவனாகிய ரிசீகனும் தாருகனை நெருங்கி 'அப்பா, தாருகா, வீணாய அகங்கொண்டெதிர்த்த கிரிஜனைக் கொம்பொடித்ததால் அவனுக்குப் பின்பலனாய் நின்ற நரிகளையும் வென்றுவிட்டாய் எனவே நினைக்கின்றேன். ஆனாலும் அவர்கள் சுபாவத்தில் அதிக தந்திரமுடையவர்களாகையால் உன்னை என்னை விட்டுப்பிரித்துவிட முயல்வார்கள். அதற்கிடங் கொடுக்காமல் ஜாக்கிரதையா யிரு. அக்கரைக்குச் செல்லுகையில் என்னை விட்டுச் செல்லாதே' என்று கூறிய கரடியின் பேச்சைக்கேட்டு ஆனந்தம் அடைந்த

தாருகனும்: 'அப்பா, உனது பலனைக் கொண்டே கிரிஜனையும் அவனது நண்பர்களையும் ஒழித்துவிட்டதாகவே நினைக்கிறேன். அவர்களுக்குள் கலகமேறபட்டிருப்பதாகவும் கேள்விப்பட்டேன். இருந்தாலும் உன்னுடனன்றி நானங்கு செல்வதில்லை. கூடிய சீக்கிரத்தில் செல்வதே நலம்' என்று சொல்லி தாருகனும் கரடியும் இக்கரையடைந்தன. அப்பொழுது எல்லாமாகக் கூடிநின்று கூச்சலிட்டதல்லாது நரிகள் தமக்குண்டாயிருந்த இரத்த நசையைத் தணிக்க முடியாமல் வாடித் தலையைத் தொங்கவிட்டுத் திரும்பிச்சென்றன. கூட்டமும் கலைந்து நானும் திரும்பிச்சென்றேன்.

மெய்ப்பொருள் நாயனார்.

[துகளன் எழுதியது.]

கற்றவன் மெய்த்தவன் போலொரு பொய்த்தவன் காய்சினத்தாற், செற்றவன் றன்னை யவனைச் செறப்புக லுற்றிருவாய், மற்றவன் றத்தா நமரே யெனச்சொல்லி வானுலகம், பெற்றவன் சேதியன் மெய்ப்பொருளாமென்று பேசுவரே.

திருத்தொண்டர் திருவந்தாதி.

சிவனடியார் உருக்கொண்டு வரும் யாவரும் மெய்ப்பொருள் என்று போற்றி வந்தார் திருக்கோவலூரில் அரசு புரிந்த சேதி நாட்டரசர் ஒருவர்; அவர்முன் பலமுறை போரில் புறங்காட்டியோடிய முத்தநாதன் என்ற பௌத்த அரசன் சிவபக்தர்களிடம் அவருக்கிருந்த முழுநம்பிக்கையும் விசுவாசத்தையும் உணர்ந்து, அவரை வஞ்சனையால் வெல்ல எண்ணி, சிவனடியார்போல் நீறு பூண்டு, ஏடும் எழுத்தாணியும் வைக்கப்படும் புஸ்தகக்கவளி போலிருந்த மடக்கு வாள் ஒன்றைக் கையில் எடுத்துக்கொண்டு அரண்மனைமுன் வந்து தோன்றினர். நடுநிசியாமத்தும் இராஜாவைப் பார்க்க வந்த சிவனடியா ராயின், வரவேற்று, உள்ளே கூட்டிச்செல்வதற்கு வாயிலில் காத்து நிற்கும் காவலாளர் பொய் வேடம் பூண்டு வந்த மாற்றானையும் பள்ளியறை யருகில் அழைத்துச் சென்றனர். அங்கே வெளிப்புறத்தில் காத்திருந்த தத்தன் என்னும் ஏவலாளன் 'அரசர் தூங்குகின்றார்; சற்று காத்திருக்கலாமோ' என்று பணிவுடன் கேட்க, மாறுவேடம் பூண்டு வந்த பொய்யனும் 'அபூர்வமானதோர் ஆகம நூலொன்று எனக்குக் கிடைத்தது. அதை அரசருக்கு உபதேசிக்க வேண்டு மென்று விரைந்து வந்த என்னைக் காத்திருக்கச் சொல்லுவது சரியோ?' என்று கேட்கவே, எங்கு தீங்கு நேரிடுமோ வென்று ஜாக்கிரதையாக அந்தப்புரத்தைப் பாதுகாக்கும் தத்தனும் தன் சந்தேகங்களை மனதுள் மறைத்து, அவனை உள்ளே போகவிட்டான். அவன் பள்ளியறையுள் புகும்போது கண்விழித்துகொண்ட அரசி சிவனடியார் யாரோ வந்தனர் என்று தன் கணவனை எழுப்பவே, சிவவேடம் தாங்கும் எல்லாவற்றையும் மெய்யெனக் கொள்ளும் மெய்ப்பொருள் நாயனாரும் உடனே விரைந்தெழுந்து பத்தினியுடன் வந்தவன் பாதத்தில் விழுந்து, 'ஐயனே, என்ன பாக்கியத்தைத் தருவதற்காக தாங்கள் நிஷ்காரணப் பிரேமையோடு இங்கு எழுந்தருளியதோ?' என்று வினவினர். 'இவ்வரிய ஆகமநூலை உபதேசிக்க வந்தேன்' என்று சொல்லிக்கொண்டே, முத்தநாதன் போலிப் புஸ்தகக் கவளியுள் மடக்கியிருந்த வாளைத்திறந்து பாதத்தில் வணங்கியெழும் அரசனை குத்தி யெறிந்தான். ஆரம்பத்திலேயே சந்தேகித்து உட்புகுந்த பகைவன் மேலேயே கண்ணாயிருந்த தத்தன் 'ஆ! மோசம்!' என்று உடனே பாய்ந்து முத்தநாதனை வாளால் வெட்ட வரும்போது, மெய்ப் பொருளார் 'தகாது இது, தத்தா; மெய்ப்பொருள் அன்றோ இவர்; இவர்மீது சீறி நம்மவர்பழி வாங்காவண்ணம் இவரை நம்மூர் எல்லையைக் கடத்துவதே தகுதி' என்று ஆக்கியாபித்தாரே யொழிய மனத்தினுட் கறுப்பு வைத்து பொய்தவ வேடங் கொண்டு புகுந்தவன் தன் பகைவனான முத்தநாதன் என்று அறிந்தும், 'சிவவேடந் தாங்கியவரைச் சமுசயித்தல் தகாது; எப்பொழுது திருநீறு பூண்டனரோ அப்பொழுதே அவர் நம் மிறைவனுருக்குத் துல்லியமாவர்' என்ற தமது கொள்கையைக் கைவிட்டாரில்லை. தத்தனும் 'அரசர் திருவுள்ளம் இது' என்று தனக்கிடப்பட்ட ஆக்ஞையைச் சிரமேற்கொண்டு முத்தநாதனுடைய தீச்செயலைக் கேட்டு அவனையெதிர்த்து வந்தவர் எல்லோரையும் தடுத்து, ஊருக்கு வெளியே அவனைக் கொண்டுபோய் விடுத்துத், திரும்ப அரசரிடம் வரவே, அதுவரை உயிரை விடாமல் காத்திருந்த மெய்ப் பொருள் நாயனார் தத்தன் வாய்மொழி கேட்டபின்பே, அகம்கிழ்ந்து அம்பலவாணனை அகத்துள் வைத்து உடல் விட்டு உயருலகஞ் சென்றார்.

ரயத்துவாரி நிலத்தீர்வை முறை

[C. S. பம்பாபதி சாஸ்திரி, B. A., B. L.]

சென்னை மாகாணத்தில் 1795-ம் வருஷத்தில் ரயத்துவாரி முறை நிர்த்தாரணம் செய்யப்பட்ட காலத்தில், அதன் கர்த்தாக்கள் நிரந்தரமாக ஒவ்வொரு ரயத்தும் இவ்வளவுதான் கவர்ன்மெண்டுக்கு தீர்வை செலுத்த வேண்டுமென ஒரு தீர்மானம் செய்திருந்தனர். 1796-ம் வருஷத்தில் சேலம் ஜில்லா சம்பந்தமாக கர்னல் ரீட் ஒரு பொது விளம்பரம் பிரசுரப்படுத்தியதில் கவர்ன்மெண்டார் இப்பொழுது விதித்திருக்கும் தீர்வையைக் காட்டிலும் அதிகமாகவாவது குறைத்தாவது வசூல் செய்யப்போவதில்லை யென்றும், ஆனால் ஏதேனும் வர்ண்ட நிலங்கள் காணப்படின், கவர்ன்மெண்டார் அவைகளுக்கு வேண்டிய பாசன வசதிகளை தம்முடைய சொந்த செலவில் ஏற்படுத்திக் கொடுத்து விளைவுக்குத் தகுந்தாற்போல் தீர்வை விதித்து அந்தத் தீர்வையையும் காலக்கிரமத்தில் ஸ்திரப்படுத்த முயலுவார்கள் என்று கூறியுள்ளார்.

சில நாட்களுக்குப் பின்னர் வந்த ஸர் தாமஸ் மன்ரோ தமது அறிக்கையில் பின்வருமாறு விளம்பரப்படுத்தி யிருக்கிறார். ஒவ்வொரு ஜில்லாவும் சர்வே செய்யப்பட்டு நிலங்களுக்குரிய தீர்வையையும் ஸ்திரப்படுத்தி விட்டால் கல்வாரி முறை மிகச் சுலபமாகி விடுகிறது. அஃது யாதெனில் ஒவ்வொரு ரயத்தின் அனுபோகத்திலுள்ள நிலத்தின் விஸ்தீர்ணமும் அதற்கு ஏற்பட்ட தீர்வையையும் கண்டு அவரவர்களுடைய பட்டாவில் குறித்துக் கொள்ள வேண்டும். இது ஒருவர் வருஷ முழுமைக்கும் செலுத்தவேண்டிய தொகையை காட்டிவிடுகிறது. அவ்விதம் ஏற்படும் காலத்து ஒருவரிடமிருந்தும் அதில் காட்டியுள்ள தொகைக்கு அதிகமாக வசூல்செய்ய இடமில்லாது

போய்விடும். ஆனால் ரயத்துகளுக்கு எக்காரணத்தைக்கொண்டாவது நஷ்டமேற்படுமாகில், செலுத்தவேண்டிய முழு தீர்வையில் வஜா செய்து கொடுக்கப்படும். இது சாசுவதமானதென்ற விஷயத்தில் இந்த ரயத்துவாரி முறைக்கும் வங்காள நிரந்தர நிலத்தீர்வை முறைக்கும் யாதொரு வித்தியாசமும் கிடையாதென்றே சொல்லலாம். ஆனால் ரயத்துவாரி ஏற்பாட்டால்கவர்ன்மெண்டாருக்கு வரண்ட நிலங்களைப் பண்படுத்தி கொடுத்ததில் அனுகுணமாக விளையக்கூடிய விளைச்சலுக்கு தகுந்தாற்போல் சிறிது அதிகமான வருமானம் கிடைக்கும் என்று கூறி யிருக்கின்றார். இவ்விதம் கவர்ன்மெண்டின் பொறுப்பாளிகள் எடுத்துரைத்த யோசனைகளை நாம் செய்து கொண்ட விண்ணப்பங்களிலும் மஹஜர்களிலும் ஆங்கிலேய கவர்ன்மெண்டார் ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரிடமிருந்து இந்தியாவின் ஆட்சியை கைக்கொண்ட 1858-ம் வருஷம் வரையில் அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொண்டே வந்திருக்கிறோம். எவ்விதமாயினும், கவர்ன்மெண்டார் தமக்குள் கொண்ட பல காரணங்களை முன்னிட்டு முன்னர் பல தடவைகளில் எடுத்துக்காட்டிய ராஜாங்க அறிக்கைகளில் கண்டுள்ள தத்துவத்தை பழக்கத்திற்கு கொண்டு வராது விடுத்தனர். கவர்ன்மெண்டார் ஜனத்தலைவர்களும் பொதுஜன ஸபைகளும் விடாது செய்திருந்த தீவிர கிளர்ச்சியை பாராட்டாது, தீர்வையை குறிப்பிட்ட சில காலங்களில் உயர்த்திக்கொண்டே வரத் தலைப்பட்டனர். 1919-ம் வருஷத்தில் இந்திய அரசாங்க சீர்திருத்தச் சட்டம் நிர்மாண நிலைமையில் இருக்கும் காலத்திலேயே, பார்லிமெண்டு மஹா சபையின் கூட்டு விசாரணைக் கமிட்டியார் சிலதீர்வைகளை நிர்வாகசட்ட முறைப்படி விதிக்கலாமென்று கூறியதிலிருந்து தீர்வை வசூல் செய்வதை சட்ட வரம்பிற்குள் கொண்டுவர வேண்டுமென்று யோசனை கூறினார்கள். ஆனால் சென்னை கவர்ன்மெண்டார் அக்கமிட்டியாரின் யோசனையைப் புறக்கணித்து தீர்வை விதிப்பதை நிர்வாக அதிகார ஆக்ஷியின் கீழ் கொண்டு வந்து விட்டார்கள். உதாரணமாக தஞ்சை ஜில்லாவில் நூற்றுக்கு 20, 25 வீதம் தீர்வையை உயர்த்தி விட்டார்கள். ரெவினியூ போர்டாரால் தயாரிக்கப்பட்ட 1328-ம் பசலியின் யாதாஸ்தில் கீழ்கண்ட விதம் பட்டாதார்கள் தீர்வை செலுத்தி வருகின்றனர்.

663,501 பட்டாதார்கள் 1 ரூபாயும் அதற்கு குறைந்த தொகையும் செலுத்து கிறார்கள். 2,271,870 பட்டாதார்கள் ரூபாய்க்குமேல் 10 ரூபாய்க்கு குறைவான தொகைசெலுத்துகிறார்கள். 887,880, பட்டாதார்கள் 10 ரூபாய்க்குமேல் 30 ரூபாய்க்குள் செலுத்துகின்றனர். 2,07,'30 பட்டாதார்கள் 30 ரூபாய்க்குமேல் 50 ரூபாய்க்குள் செலுத்துகின்றனர். இதிலிருந்து நாம் மொத்தத்தில் தீர்வை செலுத்துகிறவர்களில் மூன்றுக்கு இரண்டு பங்கு பட்டாதார்கள் 10 ரூபாய்க்குக் கீழ் வரி செலுத்துகிறவர்கள் எனவும் நூற்றுக்கு 90 பெயர்கள் 30 ரூபாய்க்கு கீழ்பட்ட தீர்வை செலுத்துபவராகவும் அறிகிறோம்; இந்தப் பட்டதார்களையே தற்சமயம் தஞ்சை ஜில்லாவில் நூற்றுக்கு இருபது இருபத்தைந்து வீதம் அதிக வரி விதித்திருப்பது பெரிதும் பாதிக்கின்றது.

உண்மையில் ஈஸ்ட் இந்தியா கம்பெனியைப் பின்பற்றி ராஜ்ய பாரம் நடத்தவந்த பொறுப்பாளிகள் முன்னர் ஆட்சிபுரிந்த பிரதிநிதிகள் கொடுத்த வாக்குறுதிகளை கைநழுவவிடாது காப்பாற்றி இருப்பார்களாகில், இந்த விவசாயிகள் இத்தகைய கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் ஆளாகாதிருந்திருப்பார்கள். இனியாவது நாம் பெரும் கிளர்ச்சிசெய்து தூண்டி முன்கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றுமாறு செய்தல்வேண்டும். இன்னும் தற்சமயம் மிக்க சலுகை பெற்ற கட்சியாரெனச் சொல்லிக்கொள்ளும் கவர்ன்மெண்டு நிர்வாக அங்கத்தினர்கள் சடுதியில் ஜனங்களின் குறைகளை நிவர்த்திக்க வழி தேடவேண்டும். ஒவ்வொரு நிலச்சுவான்தாரும் தம்மால் அனுப்பப்படும் சட்ட சபைப் பிரதிநிதிகளை தமக்கு ஏதேனும் விமோசனம் தேடப்போகிறார்களாயில்லையா வெனக்கேட்டு அவர்களைத் தமக்கு இணங்கும்வண்ணம் செய்ய வேண்டும்.

கட்டடக் குறிப்புகள்.

[B. ராமஸ்வாமி]

இருட்டிற்கும் ஈரத்திற்கும் விவாகம் நடந்ததாம்; அழுக்கு, அறியாமை, அசாக்கிரதை என்றவர்கள் கூடி ஆசீர்வதித்தார்களாம்; தம்பதிகளுக்குக் காலக்கிரமத்தில் உண்டான குழந்தைகள் வியாதியும் சாவுமாம். இந்த விமரிசைகள் பட்டணங்களில் வசிப்பவர்களுக்கு நன்றாய்த் தெரியும். மழைக்காலம் வந்து விட்டதென்றால் அநேக வீடுகளில் தரையும் ஈரம், சுவரும் ஈரம்; அசுத்தக் காற்றுத் தவிர நல்ல காற்று கிடையாது; காந்த வெளிச்சந் தவிர சூரிய வெளிச்சம் நுழையாது. வாந்திபேதியும் விஷஜுரமும் அம்மை நோயும் தலைவிரித்தாடுவதை வருஷாவருஷம் பார்த்துக் கொண்டே யிருக்கிறார்கள்.

மனிதர்கள் பலவகை இன்பங்களை அனுபவிப்பதற்கு முக்கியமான சாதனம் சரீர சௌக்கியம். சரீர சௌக்கியமானது பெரும்பாலும் ஒருவன் வசிக்கும் இடத்தையும், வாழும் வீட்டையும் பொருத்ததாயிருக்கிறது. ஆகையால் சுகவாழ்வை நாடுகிற ஒவ்வொருவனும் அவன் வீட்டை உலர்ந்த நிலைமையிலும், சுத்தமான காற்று வீசும்படியாகவும், ஒளிபொருந்தியதாயும் அமைத்துக்கொள்ள வேண்டும். தரையில் ஈரந் தாங்காதபடி வீட்டுத்தளத்தை உயர்த்தவேண்டும். தரையிலும் சுவரிலும் ஈரம் ஏறவிடாமல் அதற்குத்தகுந்த சாமான்களைத் தயாரித்து கட்டடவிதிகளை அனுசரித்து வீடுகளைக் கட்டவேண்டும். கூரையில்விழு மழைச்சலம் கூடிய சீக்கிரம் வழிந்தோடும்படி தகுந்த வாட்டங்கொடுத்துத் தாழ்வாரங்களைச் செய்விக்க வேண்டும். வீட்டுக்கழிவு ஜலம், செத்தை, குப்பை, இவைகளை வீட்டிலிருந்து சுமார் 100 அடிக்குக்குறையாமல் சேர்ப்பிப்பதற்கு வேண்டிய இடங்களைத் தயாரிக்கவேண்டும். இல்லாவிட்டால் வியாதிகளைப் பரவச்செய்யும் கொசுகு, ஈ, முதலானவைகளுக்கு வேண்டிய வசதிகளை நாமே செய்து கொடுத்ததுபோலாகும். சுத்தமான உலர்ந்த காற்று நோயற்றவாழ்க்கைக்கு இன்றியமையாததாகையால் தகுந்தவாறு வாயில்களும் பலகணிகளும் வைப்பிக்கவேண்டும். இருண்ட அறைகளில் வசிப்போர் சரீரம் வெளுத்துப்பலங்குன்றி அகால மரணமடைவதைக் காண்கிறோம். நமது தோலில் வெளிச்சம் படுவது தோலுக்கு மாத்திரமன்றி இரத்தத்திற்கும்நயத்தைக்கொடுக்கிறது. இவ்வுண

மைகளைப் பட்டணங்களில் வசிக்கும் நமது நண்பர்களுக்கும், வீடுகள் கட்டுவோருக்கும் நினைப்பூட்டுகிறோம்.

நமது முன்னோர்கள் சுகவாழ்வை நாடி "கோயிலில்லா வூரில் குடியிருக்கவேண்டாம்," "இடம்பட வீடிடேல்," "காட்டாறுகளையடுத்த வூரில் வாழ்தலே நலம்" என்று அனேகம் வேதவிதிகளையும், ஆன்றோர் வாக்குகளையும், அனுபவ சித்தமான அநாதி ஆசாரங்களையும் அனுஷ்டித்து வந்தார்கள். இன்னும், அந்தந்த இடங்களில் கிடைக்கும் சாமான்களை வைத்துக்கொண்டு தங்கள் வீடுகளைச் சொற்ப செலவிலேயே அமைத்துக்கொண்டு நோயற்று வெகுகாலம் வாழ்ந்திருந்தார்கள். உதாரணமாக, திருவநந்தபுரம், திருநெல்வேலி, கடப்பை முதலிய ஜில்லாக்களில் ஸாமானிய வீடுகளைக் கவனிப்போம். திருவநந்தபுரத்தில் தேக்கமரமும் தென்னையும் அதிகம். இவைகளின் உதவியால் "புறையிடம்" என்ற அருமையான வசதிகளை அமைத்திருக்கிறார்கள்; திருநெல்வேலியில் பனையின் உதவியால் வீட்டிற்கு வேண்டிய உத்திரங்கள், அட்டைகள், ஓட்டுக்கைகளைத் தயார்செய்கிறார்கள். இவைகள் நூற்றுக் கணக்கான வருஷங்களாகக் கட்டடங்களைத் தாங்கி நிற்கின்றன. கடப்பையில் சுவர், தளவரிசை, தாரிசு, எல்லாவற்றையும் கடப்பைக் கல்லினாலேயே செய்து முடித்திருக்கிறார்கள்; சீதோஷ்ண ஸ்திதிக்குத் தகுந்தபடி சுவர், தளம், கூரை இவைகளை அங்கங்கே கிடைக்கும் சாமான்களைக்கொண்டு சொற்பச் செலவிலேயே வசதிகளைக்கட்டி முடித்திருக்கிறதை நாம் பார்க்கிறோம்.

முற்காலத்தில் ரயில், கால்வாய், கப்பல் போக்குவரவுச்சாதனங்கள் விசேஷமாய் இல்லாத நிலைமையில் அவர்களுக்கு வேறு விதியில்லை. தற்கால நாகரீகத்தை அனுசரித்துக் கட்டவேண்டுமேயொழிய கர்னாடகச் சாமான்களும் வழிகளும் உபயோகமற்றவைகள் என்று சிலர் ஒதுக்கிவிடக் கூடும். அவர்களுக்கு அங்கங்கே கிடைக்குஞ்சாமான்களின் உதவியால் கட்டப்பட்டிருக்கும் 'மதுரைத் திருமலைநாயக்கர் மஹாலை' யும், விஜயநகர ராஜ்யத்திற்குத் தலைநகராய் அநேகம் நூற்றாண்டுகளுக்கு முன் விளங்கி இப்போது பாழடைந்து, கண்டோர் மனதைக் கவரும்படியான "ஹம்பி ரூயின்ஸையும்" (Humpi Ruins) இன்னும் கணக்கற்ற மாளிகைகள், கோவில்கள், கோபுரங்களையும் பார்க்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம். இவர்கள் கட்டடச் சாமான்களின் குணங்களை நன்றாய் அறிந்திருந்தது மல்லாமல், அவைகளைச் சேர்க்கும் வழிகளையும், கட்டடங்களை அழகாயும் அருமையாயும் அமைக்கும் வகையையும் தெரிந்துகொண்டிருந்தார்களென்று ஏற்படுகிறது.

நாமும் மேற்குறிப்பிட்ட விஷயங்களை வெகுச் சுலபமாய் தெரிந்துகொள்ளலாம். தற்காலப் போக்குவரவுச் சாதனங்களால் வேண்டிய சாமான்கள் கிடைக்கக்கூடும். அவைகளின் குணவிசேஷங்களை எளிதில் அறியக்கூடும். சீதோஷ்ண நிலைக்கு ஏற்றவிதமாய் வீடுகளையும் கட்டடங்களையும் அமைத்துக்கொள்ளுதல் சாத்தியமானதேயாம்.

இதற்குப் பூர்வ அங்கமாயுள்ளது எதுவெனில், கட்டட சாமான்கள் எவை? அவைகளின் குணங்கள் என்ன? எந்த விதமாகச் சாமான்களைச் சேகரிக்கவேண்டும்? எப்படிச் சேர்ப்பிக்கவேண்டும்? என்பதைத் தெரிந்துகொள்ளல் வேண்டும்.

கல் (சலவைக்கல், சுண்ணாம்புக் கல், துருக்கல் முதலியன) செங்கல், ஓடு, கல்ச்சுண்ணாம்பு, கிளிஞ்சல் சுண்ணாம்பு, சிமிட்டிச் சுண்ணாம்பு (Cement) சாந்து, உலோக வகைகள், மரம், வர்ணவகை, இவைகள் முக்கியமானவைகள். இவைகளின் குணங்களும், இவைகளை அடையக்கூடிய வழிகள், இவைகளின் செயற்கையாலாகக் கூடியச் சாதனங்கள், அஸ்திவாரம்; சுவர், மேற்றளம் கூரை முதலியன. பாலம் துறைமுகம், ஏரி, கால்வாய் கட்டுதல், தொழிலாளிகள், தொழிலுக்கு வேண்டிய ஆயுதங்கள், இவைகளைப்பற்றிய குறிப்புக்களை அழகாயும் தெளிவாயும் அமைத்திருக்கிறார்கள். தற்காலத்தில் அமெரிக்கா முதலான விடங்களில் இருப்புக்கம்பிகள், பருக்கைக் கற்கள் (Stone Jelly) சிமிட்டிச் சுண்ணாம்பு இவைகளை அநேகவிதமாய்ச் சேர்ப்பித்து (Reinforced Concrete Constructions) ஆகாயத்தை யளாவிய 30,40 அடுக்கு மெத்தை வீடுகள் (Sky-scrapers), மிகப்பெரிய பாலங்கள், கப்பற்றுறைமுகங்கள் முதலியவைகளைக் கட்டி முடித்திருக்கிறார்கள். இவைகளை நாமும் தெரிந்துகொள்ளுவ தவசியமெனத் தோன்றுகிறது.

கெடுப்பதொழி

[தரும சீலன்]

இது ஔவையாரின் அமுதவாக்கு. நீ பிறரைக் கெடுப்பதை யொழித்துவிடு என்பது இவ்வாக்கியத்தின் பொருளாகும். கெடுப்பதென்றால் பிறரடையும் நன்மைகளைக்கண்டு பொறாது அவர்களுக்குத் தீங்கிழைத்தலும், பிறரும் நம்மைப்போல் உயர்ந்த நிலைமைக்கு வரக்கூடாதென்ற எண்ணத்தால் தீங்கிழைத்தலும், தமக்குப் பிறர்செய்யுந் தீமைகளுக்குப் பதிலாகத் தீங்கிழைத்தலும், பிறருக்கு வேண்டுமென்றே தீங்கிழைத்தலும், ஆகிய இவைகளேயாகும். பிறர் துன்புறுவதைக் கண்டு மகிழ்ச்சி யடைவதற்காகவும் பலர் பிறருக்குத் தீங்கிழைக்காம லிருக்கவில்லை.

அநேகமாய் ஒருவர்க்கொருவர் தீங்கிழைத்துக் கொள்வது பொறாமையின் மிகுதியாலும், அறியாமையாலுமே யாகும். நம்மிலும் பிறர் பலவிதத்திலும் மேன்மை யுற்றிருந்தாலும், அதற்குரிய காரியங்களைப் பிறர் செய்தாலும், நம்முடைய அளவுக்கே அவர்கள்வரும் உத்தேசத்திலிருந்தாலும் அவர்களைக் கெடுக்க நம்மனம் நாடுகின்றது. இதற்குக்காரணம் அவர்கள் நம்மைப்போல் வந்துவிட்டால் அல்லது நமக்குமேல் உயர்ந்துவிட்டால், நமகுள்ள மதிப்பு குறைந்துவிடுமே என்ற எண்ணமென்றேசொல்லலாம். இதை நோக்கும் நாம் பிறர் அடைந்திருக்கும் கேவல அந்தஸ்தை நோக்கி அந்த அந்தஸ்தை யடைந்திருக்கும் அவர்களுடைய கீழான திசையை நோக்கிப் பொறாமை யடைந்து நாமும் அவர்களைப்போலவே கீழான நிலைமையிலிருக்கக் கொடுத்து வைக்கவில்லையே யென்று நினைத்தால் நம்மனம் நடுவு நிலைமையிலிருந்தே அரசாட்சி செய்கிறதென்று நாம் சொல்லலாம். அது மாத்திரம் நமது அனுபவத்தில் இல்லை. ஆனால் நமக்குமேல் பிறர் ஏறிவிட்டால், அடடா? நாம் என்ன எண்ணங் கொள்கிறோம்; அப்பொழுது நம்முடைய எண்ணத்தில் மண் விழாதா; நாம் மாத்திரம் பிறரடையும் நன்மைகளுக்காகப் பொறாமையுற்று அவர்களுக்குத்

தீங்கிழைக்க நினைக்கிறோமே? நாம் பிறரைப் பார்க்கினும் அடையும் நன்மைகளைக் கண்டும் பிறர் நம்மீது பொறாமை கொண்டு நம்முடைய நன்மைகளையெல்லாம் கெடுக்கவும், நம்மை யழிக்கவும் ஒரு சிறிதேனும் நினைக்காமல் இருக்க முடியுமா? நம்மைப்போலவே அவர்களும் மனிதர்களேயன்றோ? நமக்குண்டாகுந் தீயெண்ணம் பிறருக்கும் உண்டாகலாமன்றோ? அதனால் நாம் கெடமாட்டோமா?

இப்பிறப்பில் மனித ஜனனம்பெற்ற நமக்கு உண்டாகும் பலாபலன் நாம் முற்பிறப்பிற் செய்தவினையின் பிரகாரமே வந்து சம்பவிக்குமென்று அறிஞர் கூறுகிறர். அதைப்போலவே நாமும் பிறரும் ஏற்கனவே செய்துள்ள நன்மை தீமைகளுக்குத் தக்கவாறு நன்மை தீமைகளை அனுபவிக்க இடமுண்டாகிறது.

நாம் முற்பிறப்பில் எந்தத் தீமையான காரியங்களைச் செய்தோமோ அவைகளின் பயனாகத் தீக்குணங்கள் பலவும் மனத்தெழுந்து நற்குணங்கள் பலவற்றையும் அழித்து மேலெழுகின்றன. இதை நோக்கியாகிலும் நாம் இப்பிறப்பில் நன்மைகளையே செய்து மறுபிறப்பிலாகிலும் நன்மையெய்தவேண்டாமா? எப்போதும் பிறருடைய காரியங்களைக் கெடுப்பதிலேயே கண்ணாயிருந்து, "அவர்களைக் கெடுக்கவேண்டும்" என்ற எண்ணத்துடனேயே உறக்கங் கொள்ளும் நமக்குக் கடவுளினுடைய திருவருள் கிட்டுமா? மற்றும் ஜனங்கள்தாம் நம்மிடம் இருக்கும் கெட்டகுணங்களைக்கண்டு நம்மை நேசிப்பார்களா? நம்மையொரு மனிதனாக மதிப்பார்களா? நாம் எந்த விதத்திலேனும் நன்மையையடைய முடியுமா? நம்முடைய காரியங்கள் தாம் ஜயம் பெறுகின்றனவா? ஒன்றுமில்லை. பொறாமையின் காரணமாக நாம் பிறரைக்கெடுக்க முற்படுவதால், நம்மையே கெடுத்துக் கொள்கிறோம். பிறருக்காக வெட்டும் குழியில் நாமே விழுந்து மடிகிறோமன்றோ? ஆதலின் நாம் பொறாமையின் காரணமாகப் பிறரைக்கெடுக்க நினைப்பதால் ஒன்றுமில்லை. அதனால் அவர்கள் கெடவே மாட்டார்கள்.

பிறர் நமக்குக் காரணங்கொண்டோ அல்லது காரணமின்றியோ தீங்கு செய்கிறார்கள்; இதனால் அவர்கட்குத் தீங்கு செய்யவேண்டுமே என்ற சந்தேகமும் இவண் உதிக்கலாம். இதை நாம் ஆலோசித்துப் பார்த்தால் பிறர் நமக்குத் தீங்குசெய்தால் நாம் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்பதே ஏற்படும். நாம் பிறருக்குத் தீங்குசெய்திருந்து அதற்குப்பிரதியாக அவர்கள் நமக்குத்தீங்குசெய்தார்களாயின் நாம் பொறுத்துக் கொள்ளவேண்டிய கடமை இருக்கிறது. நாம் முற்பகலிற் செய்ததைப் போல் பிற்பகலில் விளைந்தது, இதைப்பற்றிப் பேச்சே கிடையாது. நாம் பிறருக்குத் தீங்கு செய்யாமலிருக்கும் போதே பிறர் நமக்குத் தீங்கு செய்வார்களா? அப்படிச்செய்தாலும் நாம் முற்பிறப்பில் செய்த தீவினையின் பயனே இங்ஙனம்வந்து சம்பவித்ததென்று நினைத்துப் பொறுத்துக்கொள்ளல் வேண்டும்; பிறர் நமக்குச்செய்த தீங்குக்காக நாம் செய்யவேண்டிய தீங்கு என்னவென்றால்; ஆண்டவனே, இவர்கள் அறியாமையினால் எனக்குத் தீங்கு செய்துவிட்டார்கள். இனிமேல் இவர்கள் இவ்வண்ணம் செய்யாமலிருக்கும்படி இவர்கட்கு அறிவுறுத்துவீராக, என்றிறைஞ்சிக் கேட்டுக் கொள்ளவேண்டியதேயாகும். காரணமின்றி நமக்குண்டாகும் கெடுதிகள் எப்போதும் சம்பவித்துக்கொண்டேயிருக்கமாட்டா. இது ஏகதேசமாகவே நடைபெறும். இதற்கு நம்வினையே காரணமென்பதை, 'செய்தீவினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்' என்ற ஔவை மூதாட்டியார் அமுதவாக்கே உறுதிப்படுத்தும்.

புயற் காற்று.

[V. நாராயணையர் M. A. M. L.]

(பிரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்த அந்நதபாபுவின் குமாரியும், நண்பன் யோகேந்திரனின் சகோதரியுமான ஹேமநளினியை இராமேசன் காதலித்ததும், அவனுடைய தகப்பனார் அவனை ஊருக்குக் கூட்டிச்சென்று அங்கே அவனுக்கு மணம் செய்வித்ததும், மணம் கழிந்து ஊருக்கு மணப்பெண்ணுடன் திரும்பி வரும்போது புயற்காற்றால் ஆற்றில் ஓடங்கள் கவிழ்ந்ததும், அப்போது வேறு ஓடத்தினின்றும் தப்பிப்பிழைத்த கமலா என்ற சிறு பெண்ணை தன் மனைவி யெனவும் அவளும் கல்லியாணகாலத்தில்தன் புருஷன் முகத்தை நன்றாய் பார்த்திராததால் இராமேசனை தன் கணவன் எனவும் கொண்டதும்; பிறகு இராமேசன் கமலாவை டோபாபுகூர் தாரணீ சரணரின் தமையன் மகள் என்றும், வேறு ஒருவர் மனைவி என்றும் அறிய, அவளைப் பெண்பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியதும் வக்கீல் வேலையில் அமர்ந்து ஹேமநளினியை மறுபடி நாடி கல்லியாணத்திற்கு உடன்பட்டதும்; கல்லியாண தினமும் குறிப்பிடப்பட்டு, உறவினர்களுக்கு அழைப்பு கடிதங்கள் அனுப்பிய பின்னர், கமலாவை பள்ளிக்கூட விடுமுறை நாளானதால் வீட்டிற்கு அழைத்துப்போக வேண்டுமென்று உபாத்தியாயினியிடமிருந்து கடிதம் அடைய, கமலாவின் கதையை இதுவரை வெளியிடாத இராமேசன் ஒன்றும் தோன்றாது கலங்கி, பிறகு கல்லியாணதினத்தை ஒதுக்கிவைக்க அந்நதபாபுவை வேண்டியதும், அவர் அதற்கு கடைசியாக உடன்பட்டுவிட்டதும்; பிறகு வெளியூருக்குச் சென்றிருந்த யோகேந்திரன் வந்து கல்லியாண காரியங்கள் நடைபெறாததைக் கேட்டு, கவலையுற்று, அக்ஷயனுடன் இராமேசன் வீடு சென்று அங்கு பள்ளிக்கூடமிருந்து வந்த கமலாவுடன் இராமேசன் பேசிக்கொண்டிருந்ததை நேரில் பார்த்து, இராமேசனோடு ஆத்திரத்துடன் வாதாடியதும்; பிறகு அக்ஷயனுடன் தன்வீட்டிற்கு வந்து சமாசாரங்களை வெளியிட்டு அந்நத பாபுவையும் ஹேமநளினியையும் வருந்தச்செய்ததும், பிறகு இராமேசன் கமலாவுடன் தன்னூர் செல்லப்புறப்பட்டு அக்ஷயன் பின்தொடர்ந்ததையும், அவனை ஏமாற்றிக் கப்பல் மார்க்கமாய் வேறு இடம் சென்றதும்; கப்பல் சிறிது தூரம் போனபிறகு ஆற்றில் மணலில் சிக்கிக்கொண்டதும், ஓர் இரவில் கமலாவிடம் உண்மையைத் தெரிவிக்கக் கருதி, கதைமூலமாக மறைத்து எடுத்துரைக்க நோக்கங்கொண்டதும்; உடைவாளை முன்னதாக அனுப்பி அதை வைத்து கணவன் நேரில் இல்லாது மணம் புரியும் ராஜபுத்திரர்கள் கதையை இயற்றிச் சொன்னதும்; சென்ற சஞ்சிகைகளிலுள்ள கதை.)

கதையை அதிக ஆவலுடன் கேட்டுக்கொண்டிருந்த கமலா "அதற்கப்புறம்?" என்று கேட்கவே,

இராமேசன்: "எனக்கு இவ்வளவுதான் தெரியும். மேலே ஒன்றும் தெரியாது. நீதான் சொல்லு, மேலே என்ன நடந்திருக்குமென்று."

கமலா: "ஓகோ! அதெப்படி? நீங்கள் தான் பாக்கிக் கதையையும் சொல்லவேண்டும்."

இராமேசன்: "நிஜமாய்! கமலா, எனக்குத் தெரியவே தெரியாது; இந்தக் கதை இருக்கும் புஸ்தகத்தின் முதற்பாகமே வெளியாயிருக்கிறது; அடுத்த பாகம் எப்பொழுது வெளியாகுமோ தெரியாது."

"சரி இப்படித்தானு செய்வீர்கள்?" என்றாள் கமலா வருத்தத்துடன்.

இராமேசன்: "என்மேல் ஏன் கோபித்துக்கொள்ளுகிறாய்? அந்தக்கதை எழுதியவனை யன்றோ தண்டிக்கவேண்டும். நான் கேட்டதற்குப் பதில் சொல்லவில்லையே! ஜெயத்சிங்கன் என்ன செய்வான் என்று சொல்லு." நதியின் போக்கை நோக்கிக்கொண்டே வெகுநேரம் யோசித்திருந்தாள் கமலா; கடைசியில் "எனக்குத் தெரியவில்லை, அவன் என்ன செய்வான் என்று; எனக்கு ஒன்றும் புரியவில்லை." இராமேசனும் ஒரு நிமிஷம் யோசிப்பது போலிருந்து, பிறகு "ஜெயத்சிங்கன் சந்திராவிடம் எல்லாவற்றையும் விளங்கச்சொன்னுல் சரியாக விருக்குமா?"

"இதென்ன கேள்வி; சொல்லாவிட்டால் எல்லாம் குழம்பிவிடாதோ? அம்மம்ம; என்ன மாகிவிடும்! அப்புறம்! வாஸ்தவத்தை சொல்லிவிடுவது தான்."

"சரி" என்றான் இராமேசனும் மனஞ் செலுத்தாமல் வேறு எதையோ யோசித்துக்கொண்டு. "சரி, கமலா, நீ வந்து,

கமலா: "நானு?"

இராமேசன்: "நான் ஜெயத்சிங்கன், நீ சந்திரா என்று வைத்துக் கொள்ளுவோம்."

கமலா: "இதென்ன வார்த்தை; எனக்குச் சற்றேனும் பிடிக்கவில்லை இந்தப் பேச்சு"

இராமேசன்: "நான் பேசவேண்டிய பேச்சு அன்றோ? அப்படியானுல், நான் என்ன செய்ய வேண்டும். நீ என்ன செய்யவேண்டும், என்று சொல்லு."

கமலா இதற்கு ஒன்றும் பதிலளிக்கவில்லை; திடீரென நாற்காலியைவிட்டு எழுந்து சென்றாள்; அங்கே அறையின் கதவுப்புறமாய் உட்கார்ந்து ஆற்றங்கரையை நோக்கியவண்ணம் உட்கார்ந்துகொண்டிருந்த உமேசனைக் கண்டு,

"உமேசா, பிசாசு பார்த்திருக்கிறாயோ நீ" என்று கேட்டாள்.

"பார்த்திருக்கிறேன். அம்மா."

"என்னமாதிரிப் பிசாசு நீ பார்த்தது? சொல்லு" என்று மூக்காலி ஒன்றை அவனருகே போட்டுக்கொண்டு உட்கார்ந்தாள்.

தனியே விடப்பட்ட இராமேசனுக்கு கமலாவைத் திரும்ப வரும்படி அழைக்க இஷ்டமில்லை; அவளோ கோபித்துக்கொண்டு போய்விட்டாள்; என்ன செய்வது?

சந்திரனின் இளம்பிறை மேல் வானத்தை மறைத்து நின்ற மூங்கிற் புதருள் மறைந்தது. கப்பலின் மேற்கட்டில் எரிந்துகொண்டிருந்த விளக்குகளை அவித்துவிட்டார்கள். கப்பலோட்டிகளும் சாப்பிட்டுப் படுக்க கப்பலின் அடிப்புறம் சென்றனர். அறைகள் அமர்த்திக்கொண்ட வேறு பிரயாணிகளும் அந்தக் கப்பலில் இல்லை; கீழ்வகுப்புப் பிரயாணிகள் கப்பலினின்றும் கீழே யிறங்கி கரையோரத்தில் சமைத்துச் சாப்பிடச் சென்றிருந்தார்கள். கரைப்புறத்திலே உள்ள கிராமத்தில் எரியும் விளக்குகளின் ஒளி கரையோரத்து மரங்களினிடையே சற்று விளங்கிற்று. ஆறு விரைந்தோடுவதால் கப்பலின் நங்கூரத்தை அடிக்கடி அலைத்து கப்பலை மெதுவாய் மேலும் கீழுமாய் ஆடச்செய்தது.

இவ்விதத் தருவாயில் இரவில், இருண்ட வானமே மேற்கட்டாகக் கொண்ட வெளிப்புறத்தில் தனித்திருந்து யோசித்தான் இராமேசன்; இந்த தர்ம சங்கடத்தினின்றும் எவ்விதம் தப்பிப்பிழைப்பது என்று அவனுக்கு விளங்கவில்லை; ஒன்று கமலாவை விட்டுவிடவேண்டும், அல்லது ஹேமநளினியை மறந்துவிடவேண்டும்; இருவர்களையும் கைவிடாமல் தன்னுடன் ஒருங்கே ஒத்திருக்கச் செய்வதற்கு வழி யொன்றும் இல்லை. ஆகையால், தன் கடமை என்னது என்று அவன் சந்தேகங் கொள்ள இடமுண்டோ? ஹேமநளினிக்கு வேறு கதி உண்டு; தன்னைப்பற்றி நினைத்திருப்பதை விட்டு வேறு யாரையேனும் கல்யாணம் செய்து கொள்ளக்கூடும்; வேறு கதியற்ற கமலாவைக் கைவிட்டால் அவள் என்ன செய்வாள், பாவம்; அப்படி இருந்தும் (மனுஷிய சுபாவம் தன் நன்மையையே பாராட்டுவதல்லவா) ஹேமநளினி தன்னை மறந்துவிடுவாள், வேறு வழியுண்டு, தன்னையே நம்பி இருக்க வேண்டியதில்லை என்றறிந்தும், இராமேசன் மனது அமைதியுறவில்லை. அவளிடம் தனக்கிருந்த ஆவலை அதிகரித்ததே யொழிய மட்டுப்படுத்தவில்லை. அவனுடைய கண்முன் அவளது அழகிய உருவம், கைக்கெட்டாத பிடி தூரத்திலே, சற்று கையை நீட்டினுல் அகப்படும் போல் தோன்றிற்று.

கைகளிற் தலையைத்தாங்கி யோசனையி லாழ்ந்தான் இராமேசன். தூரத்தில் ஒரு நரி ஊளையிட்டது; அதைக்கேட்டு அண்டைக்கிராமத்து நாய்கள் குலைக்க ஆரம்பித்தன. இந்த சத்தத்தைக் கேட்டு தலையை நிமிர்த்தவே, கமலா தன்னருகில் இருளில் வந்து நிற்பதைக் கண்டான். உடனே, நாற்காலியினின்றும் எழுந்து "கமலா, நீ ஏன் இன்னும் படுத்துக்கொள்ளவில்லை? நாழிகை யாயிற்றே!"

"நீங்கள் படுத்துக்கொள்ளவில்லையே!" "இதோ படுக்கப்போகிறேன்; படுக்கையை அப்பொழுதே எடுத்து என்னறையில் கொண்டுபோய் வைத்திருக்கிறேன்; நீ காத்திருக்காதே, போய்ப் படுத்துக்கொள்." தனக்காக அமர்த்தப்பட்டிருந்த அறையுள் படுக்கச்சென்றாள் கமலா; தான் பிசாசுக் கதை ஒன்றைக் கேட்டு பயந்திருப்பதையும், தனித்துப் படுக்க தைரியமில்லை என்பதையும் இராமேசனுக்குத் தெரிவிக்க அவள் மனம் துணியவில்லை. அவள் மனமில்லாதவள்போல் தயங்கித் தயங்கிச் சென்றதைக் கண்ட இராமேசன் மனம் புண்பட்டது.

"பயப்படாதே, கமலா; நான் அடுத்த அறையில் தான் படுத்துக்கொள்ளுகிறேன்; மத்தியிலிருக்கும் கதவைத் திறந்து வைக்கிறேன் என்றான்" அவளைத் தேற்றுவதற்காக.

கமலா கர்வத்துடன் தலைநிமிர்ந்து "பயமென்ன யயம்" என்றாள். இராமேசன் தன்னறை விளக்கை அவித்து படுக்கையில் படுத்துக்கொண்டான்.

"என்றால் கமலாவைக் கைவிடுதல் கூடாது; ஆகையால், ஹேமநளினி! இனி உன்னைவிட்டு அகன்றேன்; இனித் திரும்புதல் இல்லை. இதுதான் என் கடைசித் தீர்மானம்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். பிறகு இருளில், தன் படுக்கையிற் கிடந்து ஹேமநளினியைத் துறப்பதால் தனக்கு வரும் துயரத்தை நினைந்தான்; எண்ணங்கள் சூழ்ந்து அவன் மனதைக் கலக்கின; ஆனால் அந்த துக்கத்தைத் தாங்கமுடியவில்லை; எழுந்து அறையை விட்டு வெளிப்போந்தான். வெளியில் வில்லைப்போல் வானத்தில் இயங்கும் காரிருளைக்கண்டு இராமேசன், தன் மனதை வருத்தும் சங்கடத்திற்கும் துக்கத்திற்கும் முடிவு உண்டே; காலத்தையும் எல்லையையும் கடந்த வானத் திருள்போல எங்கும் பரந்ததல்லவே?

சாசுவதமாக நிலைத்த பொருட்களன்றோ வானத்தில் வயங்கும் இத் தாரகைகள். இராமேசனுக்கும் ஹேமநளினிக்குமுள்ள காதற் கதையின் பரிதாபமான செய்தி அவைகளைப் போய் சேரும்படியான நிலையற்ற அநித்தியம் அன்றோ? இராமேசனுடைய இவ்வநித்திய யாக்கை உயிர் நீங்கி, தகனம் செய்யப்பட்டு மண்ணுடன் மண்ணாய்க் கலந்தபின்னும் அவனுடைய ஆவி இவ்விதக் கவலைகளினின்றும் நீங்கிய பின்னும், இவ்விதமே எத்தனை இரவுகள் இப்பெரு நதி, தாரகை யொளி வீசாநிற்க, மணற்பாங்கான மேடுகள் பக்கலாய் காற்றலைக்கும் நாணற் புதர்களோரமாய், மரங்கள் சூழ அயர்ந்து உறங்கும் இவ்வூரருகில், சற்றும் சீர்குலையாமல் கடல்நோக்கிச் செல்லும்.

புத்தக விளம்பரங்கள்.

சுதேசமித்திரன் புத்தகசாலை.

உதயலன்.

என்கிற கொற்கைச் சிங்களவன்.

ஷேக்ஸ்பியர் மகாகவி ஆங்கிலபாஷையில் எழுதியுள்ள "ஒதெல்லோ என்கிற வெனிஸ் மோரியன்" என்னும் ஓர் அருமையான நாடகம். அ. மாதவையா அவர்கள் மொழிபெயர்த்தமைத்தது.

விலை அணா 12.

பத்மாவதி சரித்திரம்.

ஸ்ரீமான் அ. மாதவய்யா, பி.ஏ., எழுதிய அருமையான நாவல். புதிய பதிப்பு 10 படங்களுடன் கூடியது. இந்நூல் அலங்காரமாய் அநேக பழமொழிகளை அணிந்து சில மதுரமான கவிகளை உள்ளடக்கி, சிறுவர் சிறுமிகளும் எளிதிற் படித்தறியும்படியான தமிழ் நடையில் உள்ளது.

விலை ரூ. 2.

ஒற்றுமை.

(நான்காம் வருடம்.)

இது இந்திய மக்களிடம், சகோதர நட்பு. சமரச உணர்ச்சி, ஜீவகாருண்யம், உயர்தர அறிவு நற்குண நல்லொழுக்கத்தைப் போதிக்கும் விஷயங்கள், நாவல்கள், சரித்திரங்கள் முதலியன அடங்கிய ஒரு மாதாந்தரப் பத்திரிகை.

வருஷச் சந்தா முன் பணம் அனுப்புவோருக்கு அணா 12.

ஜீவிய சந்தா ரூபாய் 10-0-0.

வி.பி. மூலமாய் பெருவோருக்கு ரூ. 1.

வெளி நாட்டுக்கு ரூ. 1-8-0.

பி. வி. கண்ணன் அண்டு கோ,
சைதாப்பேட்டை, சென்னை.

நீங்கள்

உயர்ந்த பட்டுப் பட்டாடைகள் சகாய விலையிலும் விலைக்குத் தக்கபொருள்களாகவும் அடைய விரும்புகிறீர்களா? அப்படியானால், சென்ற 7 வருஷகாலமாக மிக கியாதியோடும் நாணயமாகவும், நடந்துவரும் காசி பாலாஜி அண்டு கம்பெனியாருக்கு எழுத மறந்துவிடாதீர்கள். உடனே விலை விபர ஜாப்தாவுக்கு எழுதுங்கள். 1923-ம் வருஷ காலண்டர் ½ அணா ஸ்டாம்பு அனுப்புவோர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

BALAJEE & Co.,
Silk Emporium, Benares City,
Branch:—336, தம்பு செட்டித் தெரு, சென்னை.

Tel:—BALAJEE.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம்: "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினுல், சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் சகல தினுசுகளும் தயாராக இருக்கின்றன. அவைகளின் விபரகேட்லாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனும்.

SILK PITAMBER Co.,
BENARES CITY.

Telegrams: "Adimoorthi" Benares.

கதர்! கதர்!! கதர்!!! ஸ்ரீ பண்டார் சுத்த சுதேசிய உடை!!!

பெயர்பெற்ற மோரதாபாத் கதர் உடைகளின் நிலயம்.

விலை வெகு குறைவானது. இந்தியா, பர்மா, சிலோன் எங்கும் சுதேசிய பண்டக சாலைகளுக்கு நாங்களே கதர் உடைகள் மொத்தமாய் அனுப்புகிறோம். ஓர்முறை வாங்குபவர் நீடித்து எங்களிடமே வியாபாரம் செய்வார்கள்.

கதர் துணிகள்.

நெ. 1.	10 கஜம்	×25"	ரூ. 2½ முதல்	ரூ. 3 வரை	
,, 2.	12 ,,	×27"	,, 4	,, 6	,,
,, 3.	16 ,,	×34"	,, 6	,, 9	,,
,, 4.	18 ,,	×36"	,, 8	,, 12	,,
,, 5.	20 ,,	×44"	,, 11	,, 13	,,

வெளுக்கப்படாத கதர் உடைகள் பீஸ் ஒன்றுக்கு கால் ரூபாய் குறைவாக கிடைக்கும். ஆர்டருடன் முன்பணமாக 4ல் 1 அனுப்பவேண்டும்.

தந்தி விலாசம்: 'Shree.'

கதர் சேலைகள் முதலியன.

10 கஜம்	× 45"	ரூ. 4½ முதல்	ரூ. 6 வரை	
9½ ,,	× 40"	,, 3 ,,	5	,,
3 ,,	× 1½ கஜ	,, 2 ,,	3	,,

எங்களிடம் கிடைக்கும் வேறு பலவித சுதேசிய துணிகளின் விலை விபரங்களை எழுதிக் கேட்டறிந்துகொள்ளலாம்.

SHREE BANDAR,
Mandi Bans Street,
Moradabad, U. P.

GOOD SEEDS



As good as can be grown. Sow the right kind of seed at the right season and save disappointment. We have just the right kind of seeds for Indian climate both flower and vegetable.

Beautifully illustrated large descriptive catalogue free on application.
(Please mention this paper when writing and correspond in English only.)

Pestonjee P. Pocha & Sons
Seed Merchants, Poona.

The United India Life Assurance Co., Ltd.
Head Office: Madras
(Established 1906)

இந்தியர் நிர்வாகத்திலிருக்கும் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி சென்னையில் இதொன்றே. உயிரின் நிலையில்லாமையை நினைத்து, நம் தமிழ் நாட்டாரனைவரும் இக்கம்பெனியில் சந்தாதாரராக நலம் பெறுவாராக. சென்ற வருஷத்தில் கிடைத்துள்ள லாபத்திலிருந்து ரூ. 1000 பாலிஸிக்கு ரூ. 15 வீதம் சந்தாதார்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. ஏஜெண்டுகள் தேவை.

Apply to:—K. S. Gopalayya,
MANAGER.

இனும்! இனும்!!

அழகான 12 ஷீட் காலண்டர். தமிழ் இங்கிலீஷ் தேதியுள்ளது. ஒரு அணு ஸ்டாம்பு அனுப்பி தங்கள் விலாசத்தை ரிஜிஸ்தர் செய்துகொள்ளுங்கள்; முந்துங்கள்.

சகல விதமான பட்டு தினுசுகளும்
காசி விலைக்கு கொடுக்கப்படும்.
:: ஒருமுறை பரிக்ஷியுங்கள் ::

K. S. MUTHIAH & Co.,
188, Govindappa Naick Street, Madras.
Head Office: BENARES.